மின்னணு ஆளுகை அமைப்புகளில்

பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மக்களவையில் – டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 31-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள், மக்களவையில், நுகர்வோர் சாதனங்களில் அடையாள அமைப்புகள் ஒருங்கிணைக்கப்படுவதால் தனியுரிமை, பயனர்களின் ஒப்புதல், தனிநபர் தகவல் பாதுகாப்பு, இணையப் பாதுகாப்பு, தனிநபர் உரிமைகள் மற்றும் மின்னணு ஆளுகை அமைப்புகளில் பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் ஜிதின் பிரசாதா அவர்கள் அளித்த பதில் வருமாறு:-

நுகர்வோர் சாதனங்களில் அடையாள அமைப்புகளை ஒருங்கிணைக்கும் மின்னணு ஆளுகை முயற்சிகள், தனியுரிமை, பாதுகாப்பு மற்றும் தனிநபர் உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் செயல்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்று ஒன்றிய அரசு கருதுவதாக அமைச்சர் தெரிவித்தார். இத்தகைய ஒருங்கிணைப்பின் போது தகவலறிந்த ஒப்புதல் பெறுதல், தகவல்களை குறிப்பிட்ட நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்துதல், தரவுகளை பாதுகாப்பாக பரிமாறுதல் மற்றும் சேமித்தல், அங்கீகாரமற்ற அணுகல் அல்லது தகவல் வெளியீட்டைத் தடுத்தல், உயிர் அடையாளத் தகவல்கள் மற்றும் தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாத்தல், தனிநபரின் விருப்பத் தேர்வை உறுதி செய்தல் ஆகியவை முக்கியமான அம்சங்களாக உள்ளன என்றும் கூறினார்.

இதற்காக தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000, ஆதார் (நிதி மற்றும் பிற மானியங்கள், பலன்கள் மற்றும் சேவைகளை இலக்காகக் கொண்டு வழங்குதல்) சட்டம், 2016 மற்றும் மின்னணு தனிநபர் தரவுப் பாதுகாப்புச் சட்டம், 2023 ஆகிய சட்டங்கள் இயற்றப்பட்டு, மின்னணு அடையாளம் தொடர்பான தொழில்நுட்பங்களை பொறுப்புடனும், வெளிப்படைத் தன்மையுடனும் பயன்படுத்துவதற்கான வலுவான சட்டக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாகவும், அதே நேரத்தில் தனியுரிமை மற்றும் தனிநபர் தரவுப் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பாதுகாப்பு மையம்!

தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000 மின்னணு பரிவர்த்தனைகள், கணினி வளங்களின் பாதுகாப்பு, இணையப் பாதுகாப்பு, இடைநிலை சேவை வழங்குநர்களின் உரிய பொறுப்புகள் மற்றும் இணையக் குற்றங்கள் தொடர்பான தொழில்நுட்ப சார்பற்ற சட்டக் கட்டமைப்பை வழங்குவதாக அமைச்சர் தெரிவித்தார். தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் 43ஏஆவது பிரிவின் கீழ், முக்கிய தனிநபர் தரவு அல்லது தகவல்களைப் பாதுகாப்பதற்கான நியாயமான பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் செயல்முறைகளை வகுத்து, 2011ஆம் ஆண்டின் தகவல் தொழில்நுட்ப (நியாயமான பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் செயல்முறைகள் மற்றும் முக்கிய தனிநபர் தரவு அல்லது தகவல்) விதிமுறைகளை ஒன்றிய அரசு அறிவித்துள்ளதாகவும் கூறினார்.

இந்த விதிமுறைகளின்படி, முக்கிய தனிநபர் தரவு அல்லது தகவல்களைக் கையாளும் நிறுவனங்கள், தங்களது செயல்பாட்டின் தன்மை மற்றும் தகவல் சொத்துகளின் சொத்துகளின் மதிப்பிற்கு ஏற்ப நியாயமான பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் செயல்முறைகளை கட்டாயமாக பின்பற்ற வேண்டும் என்றும், தகவல் பாதுகாப்பு மீறல் ஏற்பட்டால் அதற்கான இணக்கத்தை நிரூபிக்க வேண்டிய பொறுப்பும் அந்த நிறுவனங்களுக்கே இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் 70பிஆவது பிரிவின் கீழ், இந்தியக் கணினி அவசர கால பதிலளிப்பு அணி தேசிய அளவிலான இணையப் பாதுகாப்பு சம்பவங்களுக்கு பதிலளிக்கும் அமைப்பாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும், தேசிய இணைய ஒருங்கிணைப்பு மையத்தின் மூலம் இணைய அச்சுறுத்தல்களைக் கண்டறிதல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் 70ஏஆவது பிரிவின் கீழ், நாட்டின் முக்கிய உட்கட்டமைப்புகளை இணைய அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாப்பதற்காக தேசிய முக்கிய தகவல் உட்கட்டமைப்பு பாதுகாப்பு மையம் நிறுவப்பட்டுள்ளதாகவும் கூறினார். மேலும், அரசு தரவுகளைக் கையாளும் அங்கீகரிக்கப்பட்ட மேகக் கணினி சேவை வழங்குநர்களுக்கு சர்வதேச பாதுகாப்பு மற்றும் தனியுரிமைத் தரநிலைகளுடன் இணங்குவதோடு, கூடுதலான பாதுகாப்பு நிபந்தனைகளையும் ஒன்றிய அரசு கட்டாயமாக்கியுள்ளதாக அமைச்சர் தகவல் தெரிவித்தார். இதன் மூலம் மேகக் கணினி பாதுகாப்பு, சேவை மேலாண்மை மற்றும் தரவுப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதுடன், இடர் மதிப்பீடு, பாதுகாப்பு கட்டுப்பாடுகள், சேவை வழங்கல், சம்பவ மேலாண்மை, ஊடுருவல் கண்டறிதல், தரவுத் தனியுரிமை, பதிவேடுகள்

பாதுகாத்தல், தரவுக் குறியாக்கம் மற்றும் அணுகல் கட்டுப்பாடு உள்ளிட்ட முக்கிய பாதுகாப்பு அம்சங்களும் பின்பற்றப்படுவதாக கூறினார்.

தனியுரிமைத் தரநிலைகளை உறுதிப்படுத்துதல்!

ஆதார் (நிதி மற்றும் பிற மானியங்கள், பலன்கள் மற்றும் சேவைகளை இலக்காகக் கொண்டு வழங்குதல்) சட்டம், 2016 மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதிமுறைகள், ஆதார் அங்கீகார நடைமுறைகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை வழங்குவதுடன், உடலியல் அடையாளத் தகவல்கள் மற்றும் அடையாளத் தகவல்களின் பாதுகாப்பையும் உறுதி செய்வதாக அமைச்சர் தெரிவித்தார். சட்டத்தின்படி கட்டாயமாக்கப்பட்டுள்ள சூழ்நிலைகளைத் தவிர, ஆதார் அங்கீகாரம் தன்னார்வ அடிப்படையில் மட்டுமே மேற்கொள்ளப்படுவதாகவும் கூறினார்.

மேலும், தகவலறிந்த ஒப்புதல் பெறுதல், குறிப்பிட்ட நோக்கத்திற்காக மட்டுமே தகவல்களைப் பயன்படுத்துதல், அங்கீகாரக் கோரிக்கைகளை பாதுகாப்பாக அனுப்புதல், தரவுக் குறியாக்கம், தனிப்பட்ட தகவல்களைச் சேகரித்தல், சேமித்தல் மற்றும் பகிர்தல் தொடர்பாக கடுமையான கட்டுப்பாடுகளைப் பின்பற்றுதல் உள்ளிட்ட பல்வேறு பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆதார் அமைப்பில் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆதார் சட்டத்தின்படி, உடலியல் அடையாளத் தகவல்களை பகிர்வது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளதுடன், சட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள சூழ்நிலைகளைத் தவிர அடையாளத் தகவல்களைப் பயன்படுத்தவோ வெளியிடவோ முடியாது என்றும் அமைச்சர் கூறினார். மேலும், இந்தியத் தனித்துவ அடையாள ஆணையம், அங்கீகாரம் பெறுவதற்கான நோக்கம் அல்லது அதற்காக மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனையின் விவரங்களைச் சேகரிக்கவோ சேமிக்கவோ செய்யாது என்றும், குடியிருப்பாளரின் ஒப்புதலுடன் மட்டுமே "ஆம்/இல்லை" என்ற பதில் அல்லது மின்னணு அறிதல் விவரங்கள் வழங்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

மின்னணு தனிநபர் தரவுப் பாதுகாப்புச் சட்டம், 2023 மற்றும் அதற்கான மின்னணு தனிநபர் தரவுப் பாதுகாப்பு விதிமுறைகள், 2025 ஆகியவை கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார். இதன் ஒரு பகுதியாக, தனிநபர் தரவுகளைக் கையாளும் நிறுவனங்கள் பாதுகாப்பு தொடர்பான கடமைகளை முறையாக நிறைவேற்றுவதை உறுதி செய்தல், பயனுள்ள குறைதீர்ப்பு நடைமுறைகளை ஏற்படுத்துதல், தனிநபர் தரவுக் கசிவுகள் ஏற்பட்டால் அவற்றை கட்டாயமாக அறிவித்தல், தேவையான சரிசெய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், இந்திய தரவுப் பாதுகாப்பு வாரியத்தின் மூலம் அபராதம் விதித்தல் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட பாதுகாப்பு மற்றும் தனியுரிமைத் தரநிலைகளை தொடர்ந்து பின்பற்றுவதை உறுதி செய்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறினார். இந்நடவடிக்கைகள் பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தவும்,

வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தவும், மின்னணு பொது சேவைகளை பாதுகாப்பாக வழங்குவதை உறுதி செய்யவும் நோக்கமாகக் கொண்டவை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், மின்னணு தனிநபர் தரவுப் பாதுகாப்புச் சட்டம், 2023, தனிநபர்களின் தனிநபர் தரவுகளைப் பாதுகாக்கும் உரிமையையும், சட்ட பூர்வமான நோக்கங்களுக்காக அத்தரவுகளை செயலாக்க வேண்டிய தேவையையும் ஒருங்கிணைக்கும் விரிவான சட்டக் கட்டமைப்பை வழங்குவதாக அமைச்சர் தெரிவித்தார். இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மின்னணு தனிநபர் தரவுப் பாதுகாப்பு விதிமுறைகள், 2025, 2025 நவம்பர் 13 அன்று அறிவிக்கப்பட்டதாகவும் கூறினார்.

சட்டபூர்வமான நோக்கங்களுக்காக, தரவின் உரிமையாளரின் ஒப்புதல் அல்லது சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ள குறிப்பிட்ட நியாயமான பயன்பாடுகளின் அடிப்படையில் மட்டுமே தனிநபர் தரவுகளை செயலாக்க அனுமதிக்கப்படுவதாகவும் தெரிவித்தார். ஒப்புதலின் அடிப்படையில் தரவுகள் செயலாக்கப்படும் போது, அந்த ஒப்புதல் சுதந்திரமானதாகவும், குறிப்பிட்ட நோக்கத்திற்கானதாகவும், தகவலறிந்ததாகவும், நிபந்தனையற்றதாகவும், தெளிவானதாகவும் இருக்க வேண்டும். மேலும், செயலாக்கப்படவுள்ள தனிநபர் தரவுகள் மற்றும் அவற்றின் நோக்கம் குறித்து முன்கூட்டியே அல்லது அதனுடன் இணைந்த அறிவிப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

மின்னணு சேவைகள் பாதுகாப்பு!

தனிநபர் தரவுகளை எந்த நோக்கத்திற்காக, எந்த முறையில் செயலாக்குவது என்பதை தீர்மானிக்கும் நிறுவனங்கள், தனிநபர் தரவுகளைப் பாதுகாக்க நியாயமான பாதுகாப்பு ஏற்பாடுகளை செயல்படுத்துதல், பயனுள்ள குறைதீர்ப்பு நடைமுறைகளை உருவாக்குதல் மற்றும் தனிநபர் தரவுக் கசிவு ஏற்பட்டால் இந்திய தரவுப் பாதுகாப்பு வாரியம் மற்றும் பாதிக்கப்பட்ட தரவு உரிமையாளர்களுக்கு கட்டாயமாக தகவல் தெரிவிப்பது உள்ளிட்ட பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். மேலும், தனிநபர் தரவுக் கசிவுகள் மற்றும் சட்ட மீறல்கள் தொடர்பாக விசாரணை நடத்தவும், தேவையான சரிசெய்யும் நடவடிக்கைகளை உத்தரவிடவும், பண அபராதங்களை விதிக்கவும் இந்திய தரவுப் பாதுகாப்பு வாரியம் அமைக்கப் பட்டுள்ளதாகவும் கூறினார். இந்தச் சட்டத்தின் மூலம் குறைதீர்ப்பு நடைமுறைகள் மற்றும் தரவு உரிமையாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமலாக்க ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதால், தனியுரிமைப் பாதுகாப்பு மற்றும் பயனர்களின் உரிமைகள் மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைகள் அனைத்தும் பொதுமக்களின் நம்பிக்கையை அதிகரிப்பதற்கும், பயனர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், மின்னணு சேவைகளை பாதுகாப்பாக வழங்குவதை உறுதி செய்வ தற்கும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று ஒன்றிய அரசின் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் ஜிதின் பிரசாதா அவர்கள், திமுக அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.

பாகுபாடின்றி திருநங்கையர் - திருநம்பிகளின்

கல்வி வாய்ப்பு தொடர்ந்து உறுதி செய்யப்படுகிறதா?

மக்களவையில் - டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 31-

திருநங்கையர்/திருநம்பிகள் (உரிமைகள் பாதுகாப்பு) திருத்தச் சட்டம், 2026ன் முக்கிய அம்சங்கள் மற்றும் அடையாளச் சான்றிதழ்கள் வழங்குதல், சட்டப்பூர்வ அங்கீகாரம் மற்றும் நலத்திட்ட உதவிகளைப் பெறுதல் குறித்து நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் தொகுதி உறுப்பினர் எம். பி. டி.எம். கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

அது வருமாறு:-

திருநங்கையர்/திருநம்பிகள் (உரிமைகள் பாதுகாப்பு) திருத்தச் சட்டம், 2026ன் முக்கிய அம்சங்கள் மற்றும் அடையாளச் சான்றிதழ்கள் வழங்குதல், சட்டப்பூர்வ அங்கீகாரம் மற்றும் நலத்திட்ட உதவிகளைப் பெறுதல் ஆகியவற்றில் அதன் தாக்கங்கள் யாவை?

திருத்தப்பட்ட கட்டமைப்பின் கீழ் மூன்றாம் பாலின அடையாளத்தைச் சான்றளித்தல் மற்றும் சரிபார்த்தல் பணிகளை மேற்கொள்ளும் மருத்துவக் குழுக்கள் மற்றும் பிற அதிகார அமைப்புகளின் அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து விவரம் தருக?

திருத்தச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னதாக திருநங்கையர்/திருநம்பிகள் சமூகங்கள், சிவில் சமூக அமைப்புகள், சட்ட நிபுணர்கள் மற்றும் மாநில அரசுகளுடன் நடத்தப்பட்ட கலந்தாய்வுகள் பற்றிய குறிப்புகள் தருக?

திருத்தப்பட்ட விதிகள் தொடர்பாகப் பெறப்பட்ட மனுக்கள், கோரிக்கைகள் மற்றும் சட்டரீதியான சவால்கள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை; என்ன!

திருநங்கையர்/திருநம்பிகள் பாகுபாடின்றி சமமான பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு நன்மைகள், கல்வி வாய்ப்புகள் மற்றும் சுகாதார சேவைகளைத் தொடர்ந்து பெறுவதை உறுதி செய்ய முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள்?

அதற்கு ஒன்றிய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை இணையமைச்சர் பி.எல். வர்மா எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு:

திருநங்கையர்/திருநம்பிகள் (உரிமைகள் பாதுகாப்பு) திருத்தச் சட்டம், 2026ன் முக்கிய அம்சங்கள் மற்றும் அதன் தாக்கங்கள் ஆகியவை இணைப்புல் கொடுக்கப்பட்டுள்ளன.

அதன்படி திருநங்கையர் (உரிமைகள் பாதுகாப்பு) திருத்தச் சட்டம், 2026ன் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

திருநங்கையர் என்பதற்கான வரையறையில் திருத்தம் மேற்கொள்ளுதல்;

மாவட்ட ஆட்சியரால் திருநங்கையர் அடையாள அட்டை மற்றும் சான்றிதழ் வழங்கப்படுவதற்கு முன்னதாக, மருத்துவக் குழுவின் மூலம் பரிசோதனை செய்வதற்கான ஏற்பாடு;

மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேச நிர்வாகங்களின் பிரதிநிதிகளாக 'இயக்குநர்' (Director) நிலைக்குக் குறையாத அதிகாரிகளை உள்ளடக்கும் வகையில், திருநங்கையருக்கான தேசியக் குழுவின் (National Council for Transgender Persons) அமைப்பு முறை திருத்தப்பட்டுள்ளது.

திருநங்கையருக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனைகளை அதிகரித்தல்.

அடையாளச் சான்றிதழ்கள் வழங்குதல், சட்டப்பூர்வ அங்கீகாரம் மற்றும் நலத்திட்ட உதவிகளைப் பெறுதல் ஆகியவற்றில் திருநங்கையர் (உரிமைகள் பாதுகாப்பு) திருத்தச் சட்டம், 2026ன் தாக்கங்கள் பின்வருமாறு:

தலைமை மருத்துவ அதிகாரி அல்லது துணைத் தலைமை மருத்துவ அதிகாரி தலைமையிலான மருத்துவக் குழுவின் பரிந்துரையை ஆய்வு செய்த பிறகு, மாவட்ட ஆட்சியர் திருநங்கையர் அடையாள அட்டை மற்றும் சான்றிதழை வழங்குவார். சான்றிதழ்களை வழங்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சியரிடமே இருக்கும்; ஆனால், தகுதி இனி மருத்துவச் சரிபார்ப்பின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

அடையாளச் சான்றிதழ் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, தகுதியுள்ள திருநங்கையர் சட்டப்பூர்வ அங்கீகாரத்தைத் தொடர்ந்து பெறுவார்கள்; மேலும், பொருந்தக் கூடிய வழிகாட்டுதல்களின்படி, அச்சான்றிதழுடன் தொடர்புடைய நலத்திட்டங்கள் மற்றும் பிற சலுகைகளைப் பெறவும் இயலும்.

திருத்தச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள அதிகார அமைப்பானது, தலைமை மருத்துவ அதிகாரி அல்லது துணைத் தலைமை மருத்துவ அதிகாரி தலைமையிலான மருத்துவக் குழுவைக் கொண்டுள்ளது.

மருத்துவக் குழு தனது பரிந்துரையை மாவட்ட ஆட்சியரிடம் (District Magistrate) வழங்கும்; அதனை ஆய்வு செய்த பின்னரே மாவட்ட ஆட்சியர் சான்றிதழ்களை வழங்குவார்.

கலந்தாய்வு மற்றும் கருத்துகளைப் பெறுதல் என்பது ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும்; மேலும், திருத்தச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னதாக திருநங்கையர்/திருநம்பிகள் அடங்கிய குழுவினர் அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகளைச் சந்தித்திருந்தனர்.

திருத்தப்பட்ட விதிகள் தொடர்பாகப் பெறப்பட்ட மனுக்கள், கோரிக்கைகள் மற்றும் சட்டரீதியான சவால்கள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை ஆகியவை இணைப்புllல் கொடுக்கப்பட்டுள்ளன.

திருத்தப்பட்ட விதிகள் தொடர்பாகப் பெறப்பட்ட மனுக்கள், கோரிக்கைகள் மற்றும் சட்டரீதியான சவால்கள் | தற்போதைய நிலை கீழ்வருமாறு:

W.P.(C) எண் 548/2026 லட்சுமி நாராயண் திரிபாதி எதிர் இந்திய ஒன்றியம் மற்றும் பிறர் (பின்வரும் வழக்குகளுடன் இணைக்கப்பட்டுள்ளது) 04.05.2026 தேதியிட்ட உத்தரவின்படி, உச்ச நீதிமன்றம் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு அறிவிப்புகளை (notices) அனுப்பியது; அவற்றுக்கான பதில்கள் 03.08.2026க்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்திய ஒன்றியத்தின் சார்பில் வழக்கறிஞர் எம். கே. மரோரியா அறிவிப்பைப் பெற்றுக்கொண்டார். பிரதிவாதிகள் அடுத்த விசாரணை தேதிக்கு முன்னதாகத் தங்கள் எதிர்பிரமாணப் பத்திரங்களை (counteraffidavits) தாக்கல் செய்ய வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது. மேலும், இவ்வழக்குகள் அடங்கிய தொகுப்பானது, இந்தியத் தலைமை நீதிபதியால் அமைக்கப்படவுள்ள மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வின் முன் விசாரணைக்கு வைக்கப்பட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது.

W.P.(C) எண் 512/2026 மனோஜ் நருலா எதிர் இந்திய ஒன்றியம் மற்றும் பிறர். W.P.(C) எண் 519/2026 மன்வீர் யாதவ் எதிர் இந்திய ஒன்றியம் மற்றும் பிறர். |

W.P.(C) எண் 535/2026 அக்காய் பத்மசாலி எதிர் இந்திய ஒன்றியம் மற்றும் பிறர். W.P.(C) எண் 548/2026 லட்சுமி நாராயண் திரிபாதி எதிர் இந்திய ஒன்றியம் மற்றும் பிறர். |

W.P.(C) எண் 541/2026 கின்னார் மா ஏக் சமாஜிக் சன்ஸ்தா அறக்கட்டளை எதிர் உள்துறை அமைச்சகம். W.P.(C) எண் 546/2026 ரச்சனா முத்ராபோயினா எதிர் இந்திய ஒன்றியம் மற்றும் பிறர்.

W.P.(C) எண் 547/2026 ஆதர்ஷ் சோனி எதிர் இந்திய ஒன்றியம் மற்றும் பிறர். W.P.(C) எண் 566/2026 அபார்திம் ராய் (எ) சுப்ரவா ராய் எதிர் இந்திய ஒன்றியம் மற்றும் பிறர்.

W.P.(C) எண் 568/2026 தங்ஜாம் சாண்டா சிங் (சாண்டா குரை என்றும் அழைக்கப்படுபவர்) எதிர் இந்திய ஒன்றியம் மற்றும் பிறர். இவை இந்திய உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

2. W.P.(C) 4620/2026 (PIL) லக்ஷய் ஜெயின் எதிர் இந்திய ஒன்றியம்; இது இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது; W.P.(C) 4587/2026 டாக்டர் சந்திரேஷ் ஜெயின் எதிர் இந்திய ஒன்றியம்; இது டெல்லி உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

உச்ச நீதிமன்றம், வழக்கு மாற்றக் கோரும் மனுக்கள் (சிவில்) எண் 16861692/2026 (இந்திய ஒன்றியம் எதிர் நைபோர் சன்ஸ்தா மற்றும் பிறர்) மீதான 15.06.2026 தேதியிட்ட உத்தரவில், அம்மனுக்கள் மீது அறிவிப்பாணை (நோட்டீஸ்) பிறப்பித்த அதே வேளையில், "இதற்கிடையில், உயர் நீதிமன்றத்தில் நடைபெறவுள்ள மேல் நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட வேண்டும்" என்றும் உத்தரவிட்டுள்ளது. இவ்வழக்கு அடுத்த விசாரணைக்காக 03.08.2026 அன்று பட்டியலிடப்பட்டுள்ளது.

இந்தத் திருத்த சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு பெற்றதைப் போலவே, பாகுபாடின்றி சமமான பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு நன்மைகள், கல்வி வாய்ப்புகள் மற்றும் சுகாதார சேவைகளைத் தொடர்ந்து பெறுவார்கள்.

இவ்வாறு அவர் பதிலளித்தார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மிசா வி. கிருஷ்ணன்

ஜூலை 31 (2011)

இராயபுரம் 'ராபின்சன்' பூங்காவில் 1949–ல் கழகம் துவக்கப்பட்ட பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு, அன்று முதல் கழகப் பணியாற்றி வந்தவர்.

இராயபுரம் பகுதியில் வட்டக் கழகச் செயலாளராகவும், மாவட்டப் பிரதிநிதியாகவும் கழகப் பணியாற்றியவர்.

துறைமுகத் தொழிலாளியான இவர், தொ.மு.ச.பேரவையின் கீழ் இயங்கும் 'துறைமுக தொழிலாளர் சங்கத்தை உருவாக்கியதோடு, தொழிலாளர் கூட்டுறவு சங்க தலைவராக பொறுப்பு வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் பங்கு பெற்றதோடு, நெருக்கடிகால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் சென்னை மத்திய சிறையில் ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

நாமக்கல் மேற்கு மாவட்டம்

பள்ளிபாளையம் தெற்கு ஒன்றியம் மற்றும் வெங்கரை பேரூர்க் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு

நாமக்கல் மேற்கு மாவட்டம், பள்ளிப்பாளையம் தெற்கு ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **பி.யுவ ராஜ்**, (30, ஆலாம்பாளையம் அஞ்சல், குமாரபாளையம் வட்டம், நாமக்கல் மாவட்டம்) அவர்கள் பள்ளிப்பாளையம் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராகவும்;

கபிலர்மலை தெற்கு ஒன்றியம், வெங்கரை பேரூர்க் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **கா.தீபன்**, (123, மேற்கு தெரு, கொளக்காட்டுபுதூர் அஞ்சல், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம் 637 208) அவர்கள் வெங்கரை பேரூர்க் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்" **துரைமுருகன்**
சென்னை- 600 018. பொதுச்செயலாளர்,
நாள்: 29.07.2026. தி.மு.க.

விருதுநகர் வடக்கு மாவட்டம் சிவகாசி மாநகரம்,

6வது பகுதிக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு!

விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகரம், 6வது பகுதிக் கழகச் செயலாளர் ஞானசேகரன் அவர்கள் தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டதால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, **எஸ்.பி.பி. விக்னேஷ்பிரபாகரன்** (104, தில்லை சிதம்பரம் தெரு, சிவகாசி, விருதுநகர் மாவட்டம்) அவர்கள் 6வது பகுதிக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்" **துரைமுருகன்**
சென்னை 600 018. பொதுச் செயலாளர்
நாள் :29.07.2026 தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வெ. இரத்தினம்

ஜூலை 31 (1985)

1939ல் நீதிக்கட்சியிலும், 1944ல் திராவிடர் கழகத்திலும் தீவிரமாக பணியாற்றி, பின்னர் கழகம் துவக்கப்பட்டபோது கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

1951 முதல் 1980 வரை மதுரை மாவட்ட பிரதிநிதியாக கழகத்தில் பொறுப்பு வகித்து பணியாற்றியவர்.

தனது இளமைப் பருவத்திலேயே திராவிடர் கழக பற்றாளராக இருந்த காரணத்தால், சாதிஒழிப்பு, கலப்பு திருமணம் ஆகியவற்றை தனது வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தி, அப்பகுதி மக்களுக்கு எடுக்காட்டாய் விளங்கி, திராவிட இயக்க கொள்கைகளை தன் பகுதியில் வளர்த்தவர்.

கழகம் நடத்திய பல போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.